வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – வான்மதி

தேதி 02.03.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மோடி (10)

3 நாள் பயணமாக குஜராத் மாநிலத்திற்கு சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று சோம்நாத் ஆலயத்திற்கு செல்கிறார். ஆலயத்தின் அறக்கட்டளை தலைவராக உள்ள அவர் அறக்கட்டளை நிர்வாகிகள் கூட்டத்திற்கு தலைமை ஏற்கிறார். கூட்டத்தில் சோம்நாத் ஆலயத்தின் வளர்ச்சி பணிகள் குறித்துமுக்கிய ஆலோசனை நடத்துவார். பின்னர், ஜாம்நகரில் உள்ள வந்தாரா தேசிய விலங்கு பூங்காவிற்கு செல்கிறார். பூங்காவில் பராமரிக்கப்பட்டு வரும் விலங்குகளை பார்வையிடும் அவர், தொடர்ந்து தேசிய வன விலங்கு வாரிய கூட்டத்திற்கும் தலைமை வகிக்கிறார். நாளை பிரதமர் ஆசிய சிங்கங்களின் கடைசி வசிப்பிடமான கிர் தேசிய பூங்காவில் காட்டு சபாரி மேற்கொள்வார்.

தன்கர் (15)

வளர்ச்சி அடைந்த பாரதம் என்பது நமது கனவு அல்ல என்றும், அது நமது குறிக்கோள் என குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் தெரிவித்துள்ளார். கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் பாரதிய விசாரகேந்திரம் ஏற்பாடு செய்திருந்த 4 ஆவது சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்றில் அவர் பங்கேற்று பேசினார். கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சி பாதையை அவர் எடுத்துரைத்தார். மக்களை மையமாக கொண்ட கொள்கைக்கும், வெளிப்படையான நிர்வாகமும் நாட்டுக்கு உத்வேகத்தை அளித்துள்ளன என்றும் அவர் கூறினார். 140 கோடி மக்களை கொண்ட நாட்டில் ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பறை, மின்சார இணைப்பு, தண்ணீர் இணைப்பு, எரிவாயு, இணைய வசதி, அனைத்து பகுதிகளிலும் சாலை, ரயில், சுகாதாரம், கல்வி துறையின் வளர்ச்சி போன்றவை நமது வளர்ச்சி பாதையை வலுப்படுத்தி உள்ளதாக அவர் குறிப்பிட்டார். ஜாதி, இனம், மொழி ஆகியவற்றை பொருட்படுத்தாமல் கடைசிவரை இருப்பவர்களுக்கு பலன் சென்றடைய வேண்டும் என்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும அவர் தெரிவித்துள்ளார்.

*அமித்ஷா* (14)

போதை பொருள் கடத்துபவர்களை தண்டிக்க மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா

தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது சமூக ஊடகப் பதிவில், வெறும் பண ஆசையால், கடத்தல்காரர்கள், இளைஞர்களை போதைக்கு அடிமையாக்கி, அவர்களது வாழ்க்கையை இருட்டில் தள்ளி வருவதாக தெரிவித்துள்ளார். மத்திய அரசு பல்வேறு வகையில் போதை பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார். இத்தகைய நடவடிக்கைகளின் பயனாக நாடு முழுவதிலும் நீதிமன்றங்களில் 12 வழக்குகள் விசாரிக்கப்பட்டு, 29 போதை பொருள் கடத்தல்காரர்கள் தண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். போதை பொருள் அற்ற இந்தியாவை உருவாக்கும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு துல்லியமான புலன் விசாரணையை மேற்கொண்டு, போதை பொருள் அச்சுறுத்தலை எதிர்த்து போராடுவதாக அவர் கூறினார்.

*பிரல்ஹாத் ஜோஷி (11)*

நாட்டில் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதிலும், விநியோக சங்கிலியை வலுப்படுத்துவதிலும், மத்திய உணவு பொருள் சேமிப்பு நிறுவனம் முக்கிய பங்காற்றுவதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற உணவு பொருள் சேமிப்பு

நிறுவனத்தின் 69 ஆவது தின விழாவில் பங்கேற்று பேசிய அவர், பிரதமரின் கரிப் கல்யாண் யோஜனா, அன்னதாதா ஆய்சன் ரக்ஷன் அபியான் ஆகிய திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தியதில் மத்திய உணவு பொருள் சேமிப்பு நிறுவனம் பெரும் பங்காற்றுவதாக தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் நுகர்வோர் விவகாரங்கள் உணவு மற்றும் பொது விநியோகத்துறை இணையமைச்சர் திரு வெர்மா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

*வாக்காளர்* (9)

நாட்டின் வெவ்வேறு மாநிலங்களை சேர்ந்த வாக்காளர்களுக்கு ஒரே வாக்காளர் எண் ஒதுக்கப்பட்டதன் மூலம் அவர்கள் போலி வாக்காளர்களாக கருதப்பட மாட்டார்கள் என தேர்தல் ஆணையம் தெளிவுப்படுத்தி உள்ளது. ஒரே வாக்காளர் எண்ணை கொண்ட வாக்காளர்களுக்கு சட்டமன்ற தொகுதி, வாக்குச்சாவடி உள்ளிட்ட பிற விவரங்கள் மாறுபடும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இருவேறு மாநிலங்களின் வாக்காளர்கள் ஒரே வாக்காளர் எண்ணை கொண்டுள்ளதாக சில ஊடகங்கள் சுட்டிக் காட்டியதை அடுத்து இந்த விளக்கத்தை தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆய்வறிக்கை(9)

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் வறுமை கணிசமாக குறைந்துள்ளதாக பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பொருளாதார வல்லுனர்களான சுர்ஜித் எஸ் பல்லா மற்றும் கரண் பாசின் ஆகியோரால் வெளியிடப்பட்ட இந்த ஆய்வறிக்கை கடந்த 2022 - 23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டுகளுக்கான வீட்டு செலவு தரவுகளில் இருந்து பகுப்பாய்வு செய்ததாகும். இந்த ஆய்வுகளின் படி, இந்தியாவில் வறுமை அளவுகளில் கணிசமான சரிவை குறிக்கின்றன. நாட்டில் தீவிர வறுமை மிகக் குறைந்த அளவிற்கு உள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஜெய்சங்கர் (14)

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கும் முயற்சியில் மத்திய அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார். தமிழக பாஜக தலைவர் திரு அண்ணாமலை மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்து எழுதியிருந்த கடிதத்திற்கு பதில் அளித்திருந்த அவர், இந்திய மீனவர்களின்

நலன் மற்றும் பாதுகாப்பே மத்திய அரசின் உயர் முன்னுரிமை என்றும், அவர்களை பாதுகாப்பதற்காக இயன்ற அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார். மத்திய அரசின் தொடர் முயற்சியின் காரணமாக கடந்த 2024 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை, 535 மீனவர்கள் விடுவிக்கப் பட்டுள்ளதாகவும், மேலும் 15 மீனவர்களை திரும்ப கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். இவர்கள் தவிர, இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை மீட்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

*ரமலான்* (17)

சகோதரத்துவத்தையும், ஏழைகளுக்கு உதவி செய்வதையும் வலியுறுத்தும் இஸ்லாமியர்களின் புனித ரமலான் நோன்பு நாடு முழுவதும் இன்று தொடங்கியது. நாடு முழுவதும் உள்ள பள்ளிவாசல்களில் இன்று அதிகாலை நடைபெற்ற சிறப்பு தொழுகைகளில் ஏராளமான இஸ்லாமியர்கள் பங்கேற்றனர். பிறை தென்பட்டதை தொடர்ந்து தமிழ்நாட்டிலும் ரமலான் நோன்பு கடைபிடிக்கப்படும் என தமிழ்நாடு அரசின் தலைமை ஹாஜி அறிவித்தார். இதன் அடிப்படையில் உலக புகழ்

பெற்ற நாகூர் தர்காவில் ரமலான் சிறப்பு தொழுகை இன்று நடைபெற்றது. தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் உள்ள பள்ளி வாசல்களில் தொழுகைகள் நடைபெற்றன. புனித ரமலான் நோன்பு தொடங்கி உள்ளதை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாடு முழுவதிலும் உள்ள இஸ்லாமியர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், இந்த புனித நாள் சமூதாயத்தில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் கொண்டு வரட்டும் என தெரிவித்துள்ளார். இந்த புனித நாளில் நன்றி உணர்வும், அர்ப்பணிப்பும் பிரதிபலிப்பதுடன், கருணை, அன்பு சேவை ஆகிய நற்பண்புகளை நாட்டு மக்களுக்கு நினைவூட்டுவதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

கும்பமேளா (14)

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் கடந்த 24 ஆம் தேதி முடிவடைந்த மகா கும்பமேளாவை ஐக்கிய அரசு அமிரகத்தின் ஊடகங்கள் பெரிதும் பாராட்டி உள்ளன. கல்ப் நியூஸ், கல்ப் டுடே உள்ளிட்ட அந்நாட்டின் மிக பிரபலமான பத்திரிக்கைகள் உலகின் மிக பெரிய ஆன்மீக ஒன்று கூடலாக நடந்து முடிந்த கும்பமேளா இருந்தது என்றும், அதில் ஐக்கிய அமீரக மக்கள் கலந்து கொண்டது குறித்தும் புகழ்ந்து

கட்டுரைகளையும், செய்திகளையும் வெளியிட்டுள்ளன. உலகத்தை ஈர்த்த இந்த ஆன்மீக திருவிழாவிற்கு சிறப்பான ஏற்பாடுகள், போக்குவரத்து ஆகியவை குறித்தும் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. கலாச்சார செழுமைமிக்க நிகழ்வுகள், ஆன்மீக முக்கியத்துவம், தொழில்நுட்ப பயன்பாடுகள் ஆகியவை இந்த பிரமாண்டமான திருவிழாவை உலக அளவிற்கு கொண்டு சென்றுள்ளதாக ஊடகங்கள் தெரிவித்துள்ளன. 48 நாட்கள் நடைபெற்ற இந்த மகா கும்பமேளாவில், 66 கோடிக்கும் அதிகமான மக்கள் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

*டெல்லி மாசு* (8)

தலைநகர் டெல்லியில் காற்று மாசுபாட்டை கட்டுபடுத்த மார்ச் 31 ஆம் தேதிக்கு பிறகு 15 ஆண்டுகளுக்கும் மேலான வாகனங்களுக்கு பெட்ரோல் பம்புகளில் எரிபொருள் கிடைக்காது என்று டெல்லி அரசு அறிவித்துள்ளது. காற்று மாசுபாடு குறித்து நேற்று நடைபெற்ற அதிகாரிகளின் ஆலோசனை கூட்டத்திற்கு பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அம்மாநில அரசு தெரிவித்துள்ளது. 15 ஆண்டுகளுக்கு மேலான வாகனங்களை அடையாளம் கண்டு, அவற்றை நகரத்திற்குள் நுழைவதையும், வெளியேறுவதையும் தடுக்க குழு அமைக்கப்படும் என்றும் அரசு தெரிவித்துள்ளது.

பொதுத்தேர்வு (17)

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பிளஸ் 2 பொதுத்தேர்வுகள் நாளை தொடங்கி, வரும் 27 ஆம் தேதி வரை நடைபெற உள்ளதாக மாநில பள்ளி கல்வி இயக்ககம் அறிவித்துள்ளது. இதற்காக புதுச்சேரியில் 20 தேர்வு மையங்களும், காரைக்காலில் 5 தேர்வு மையங்களும் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான மைய முதன்மை கண்காணிப்பாளர்களும், அலுவலர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவ்வாண்டு புதுச்சேரி பகுதியில், 86 தனியார் பள்ளிகளை சேர்ந்த 6 ஆயிரத்து 992 மாணவர்களும், 362 தனித் தேர்வர்களும், தேர்வு எழுத உள்ளனர். இதேபோல் காரைக்காலில், 16 தனியார் பள்ளிகளை சேர்ந்த 640 பள்ளி மாணவர்களும், 111 தனித் தேர்வர்களும் தேர்வு எழுத உள்ளதாக மாநில பள்ளி கல்வி இயக்ககம் தெரிவித்துள்ளது. தேர்வு எழுத வரும் மாணவர்கள் மொபைல்போன் உள்ளிட்ட தகவல் தொடர்பு சாதனங்கள் கொண்டு வர தடை செய்யப்பட்டுள்ளது. தேர்வு கூட அனுமதி சீட்டு இல்லாத மாணவர்கள் எக்காரணத்தை கொண்டும் தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். தனித் தேர்வர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட ஒப்புகை சீட்டு எண், மற்றும் பிறந்த தேதியை வைத்து தனியார் கணினி மையம் மூலம் தேர்வு கூட அனுமதி சீட்டுகளை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.